

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், கழக இளைஞர் அணிச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் சந்தித்து தனது புதல்வர் பி.இனியன் பள்ளிப்படிப்பை முடித்து கல்லூரிப் படிப்பை புதுடெல்லியில் உள்ள ஓபி ஜிந்தால் யுனிவர்சிட்டியில் தொடர்வதையொட்டி வாழ்த்துப் பெற்றனர்.

## தி.மு.க. உறுப்பினர்கள் மீது வழக்குப் பதிந்து

# அரசியல் பழிவாங்குவதே - த.வெ.க. அரசின் ஒரே பணியாக உள்ளது!

## பாளையங்கோட்டை சிறையில் மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ.வைச் சந்தித்த பின்னர் சிறைவாயிலில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**பாளையங்கோட்டை, ஜூலை 29 –**

**சர்வாதிகார ‘சோபா மாடல்’ அரசால் பழிவாங்கும் நோக்கத்தில் கைது செய்யப்பட்டுள்ள கழக சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் அவர்களை பாளையங்கோட்டை மத்திய சிறையில் சந்தித்த பின் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஊடகங்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:**

“எங்களின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மார்க்கண்டேயன் அவர்கள், கடந்த 8 நாட்களாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். `அரசைத் தவறாகப் பேசிவிட்டார்’ என்று வழக்குப் போட்டு மிரட்டுகின்ற பணியை, இந்த த.வெ.க. அரசு செய்துகொண்டு இருக்கிறது.

எங்கள் தலைவரது அறிவுறுத்தலின் பேரில், அவரைச் சந்தித்து நலம் விசாரிப்பதற்காக வந்திருக்கிறேன்.

நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினர். அதனால், அவரைப் பார்ப்பதற்காக வந்தேன். நானும், நம்முடைய முன்னாள் அமைச்சர் அக்கா கீதாஜீவன் அவர்களும், நம் சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களும் இன்று நேரில் சென்று, அவரைச் சந்தித்து நலம் விசாரித்து வந்திருக்கிறோம். அவர் மிகவும் தைரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்.







*கேள்வி: தொடர்ந்து, தி.மு.க. உறுப்பினர்கள்மீது வழக்குப்பதிவு செய்வதை எப்படிப் பார்க்கிறீர்கள்? பழிவாங்கும் நடவடிக்கையாகப் பார்க்கிறீர்களா?*

பதில்: இந்த அரசின் ஒரே பணியாகத்தான் இதைப் பார்க்கிறேன். வேறு என்ன அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள்?

தூத்துக்குடியில், திருநெல்வேலியில், த.வெ.க. நிர்வாகிகள்மீது, அவர்கள் கட்சிக்காரர்களே பல்வேறு குற்றச்சாட்டுகளை வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். அதைப் பற்றியெல்லாம் இந்த அரசு கொஞ்சம்கூட செவிசாய்க்கவில்லை. முழுக்க முழுக்க திராவிட முன்னேற்றக் கழகத்தையும், எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களையும் பழிவாங்கும் நடவடிக்கையில் மட்டுமே ஈடுபட்டு வருகிறது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களை சோஃபா கொடுத்து விலைக்கு வாங்குகிறது. நான் யாரைச் சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். யாரைச் சொல்கிறேன் என்று அவர்களுக்கும் தெரியும், அந்தப் பணிகளைத்தான் இந்த அரசு 24 மணி நேரமும் முழுநேர வேலையாகச் செய்துகொண்டு இருக்கிறது.

இவ்வாறு அப்பேட்டியின் போது உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

## த.வெ.க. நிர்வாகிகள் மற்றும்

# அமைச்சர்கள் மோதல் மிரட்டல் ஆடியோக்கள்!

## நடவடிக்கை எடுத்திட தி.மு.க. ஐ.டி.விங் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 29 –**

த.வெ.க. கட்சியின் நிர்வாகிகள் மற்றும் அமைச்சர்கள் இடையேயான மோதல்களும், அதைத் தொடர்ந்து வெளியாகும் மிரட்டல் ஆடியோக்களும் சட்டம் ஒழுங்கு குறித்த பெரும் கேள்விகளை எழுப்பியுள்ளன.

மக்கள் நலனைப் பேண வேண்டிய பொறுப்பில் இருப்பவர்களே, பொதுவெளியிலும் போனிலும் பகிரங்கமாக வெட்டிப் புதைத்துவிடுவேன், கொன்றுவிடுவேன் என்ற ரேஞ்சிற்கு ரவுடிச பாணியில் மிரட்டல் தொனியில் பேசுவது எந்த விதத்தில் நியாயமாகும்?

அதிகார பலத்தையும் கட்சிப் பதவியையும் வைத்துக்கொண்டு சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு செயல்படும் இத்தகைய போக்கு, ஜனநாயகத்தின் மீதும் சட்டம் ஒழுங்கின் மீதும் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை முற்றிலும் சிதைப்பதாக உள்ளது.





வன்முறைப் பேச்சையும் ஆக்ரோஷமான மிரட்டல்களையுமே தீர்வாக நினைப்பது கடும் கண்டனத்திற்குரியது. மக்களுக்கு முன்மாதிரியாகச் செயல்பட வேண்டிய மக்கள் பிரதிநிதிகளும் கட்சி நிர்வாகிகளும் இப்படித் தெருவொழுங்கு அற்ற ரவுடிகளைப் போல நடந்துகொள்வதுதான் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் லட்சணமா? இத்தகைய வன்முறைப் போக்கை உடனடியாகக் கட்டுப்படுத்தி, மிரட்டலில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

## திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக

# பட்டமளிப்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு அவமரியாதை செய்வதா?

## நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் மு. அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. கண்டனம்!

*நெல்லை, ஜூலை 29 -*

திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு பல்கலைக் கழகம் அமைத்திட வேண்டுமென்ற தென்மாவட்ட மக்களின் எண்ணத்தை அறிந்து புரிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருநெல்வேலியை பூர்வீகமாகக் கொண்ட சைவ வேளாளர் மரபில் உதித்த மனோன்மணியம் என்ற புகழ்பெற்ற நாடகம் இயற்றிய தமிழறிஞர் சுந்தரம் அவர்கள் பெயரில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் என்று 07.09.1990 ல் நெல்லைக்கு அருகே உள்ள அபிஷேகப்பட்டி கிராமத்தில் புதிய பல்கலைக் கழகத்தை அமைத்தார்.



**தமிழ்த்தாய்க்கு பெருமை சேர்த்த கலைஞர்!**

மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்து தமிழ் நாட்டில், தமிழ்நாடு அரசு சம்பந்தமான அனைத்து விழாக்களிலும், நிகழ்ச்சிகளிலும் முதலில் பாடப்பட வேண்டும் என்று சட்டத்தை இயற்றி தமிழ்த்தாயின் தலைமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்த்தாய்க்கு பெருமை சேர்த்தார்.

28.08.2026 அன்று நடைபெற இருக்கிற மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக 33 வது பட்ட மளிப்பு விழாவில் முதலில் வந்தே மாதரம் இரண்டாவதாக தேசிய கீதம், மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து என்று விழா நிகழ்ச்சி நிரலை பல்கலைக் கழக துணை வேந்தர் அறிவித்துள்ளார்.

**தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட டெல்லியில் அனுமதி கேட்கும் அவலம்!**

தமிழ்நாடு முதலமைச்சராக விஜய் அவர்கள் பொறுப்பேற்றவுடன், பிரதமர் மோடி அவர்களை டெல்லியில் சந்தித்தபோது தமிழ்த்தாய் வாழ்த்து பாட வழிகாட்டு நெறிமுறைகள் அறிவிக்க வேண்டுமென கேட்டதாக செய்திகள் வெளிவந்தது. அதற்கு பின்பும் தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாட அனுமதி பெற முடியாத தமிழ்நாடு முதலமைச்சர்தமிழ்நாட்டுக்கு தேவையான வேறு எதையும் பெற்றுத் தர முடியாது என்பதை தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து பாட டெல்லியில் அனுமதி கேட்க வேண்டிய தேவையில்லை, தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாட முதலமைச்சரே உத்தரவு பிறப்பிக்கலாம் என்ற அடிப்படையை கூட தெரியாதவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறார்.

இந்தியா ஒன்றியத்தில் ஆட்சி நடத்துகிற பா.ஜ.க. தமிழ்நாடு உயர் கல்வித் துறையை கையில் வைத்திருக்கும் காங்கிரஸ் தமிழ்நாட்டில் ஆட்சி நடத்திக்கிற தவெ.க அரசு மூன்றுபேரும் கும்பலாக இணைந்து தமிழ்த்தாயை அவமதிக்கும் செயலை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். விரைவில் தக்க பதிலடி கொடுத்து பாடம் புகட்டுவார்கள்.

**தமிழ் மொழியை அழிக்கும் வஞ்சக செயல்!**

தமிழ்வளர்த்த சான்றோர்கள் உலவிய தரணி போற்றும் தாமிரபரணி பாயும் திருநெல்வேலி சீமையில் தமிழ்த்தாய் வாழ்த்து இயற்றிய மனோன் மணியம் சுந்தரனார் பெயரில் அமைந்த பல்கலைக் கழகத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்படும் என்ற கவர்னர் மாளிகையின் சர்வாதிகார ஏவல் குரல் கேட்டு வாய் மூடி மௌனமாக இருந்து, தமிழ்மொழியை அழிக்க திட்டமிடும் பா.ஜ.க. வுக்கு வரிந்து கட்டி துணைநிற்கும் த.வெ.க. அரசின் வஞ்சக செயலுக்கு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

## தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதிய பேராசிரியர் சுந்தரனார் பெயரில் இயங்கும் பல்கலையிலேயே – இந்த அரசில் தமிழுக்கும் தமிழர்க்கும் அவமானம் நிகழ்கிறது!

# தமிழ் அவமதிக்கப்படுமானால் - ஆர்ப்பாட்டமும் போராட்டங்களும் நடத்தப்படும்!

## திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் எச்சரிக்கை!

*சென்னை, ஜூலை 29 -*

*திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியனின் கண்டன அறிக்கை வருமாறு :-*

*தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் நாள், ஓர் அரசாணையை வெளியிட்டார். அதன்படி மனோன்மணியம் சுந்தரனார் எழுதியுள்ள “நீராரும் கடலுடுத்த...” என்று தொடங்கும் பாடலே, இனிமேல் தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக (state song) இருக்கும் என்று அறிவித்தார்.*

*நாம் ஒரு விழாவைத் தொடங்கும் போது, அதில் நம் மொழியின் தொன்மையை, பெருமையைப் பேசுவதும், வாழ்த்துவதும் இயல்பானதும், தேவையானதும் என்று அவர் கருதினார்!*

*அதே நேரம், பிற மொழிகளை அந்த இடத்தில் விமர்சனம் செய்ய வேண்டியதில்லை என்று கருதிய கலைஞர்,*



*பெருந்தன்மையோடு, “ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து” என வரும் வரியை நீக்கிடவும் ஆணையிட்டார்!*

*அன்றிலிருந்து இன்று வரை இம்மரபு, அரசு விழாக்களிலும், பல்கலைக்கழகங்கள், தமிழ் உணர்வாளர்கள் நடத்தும் விழாக்கள் ஆகியன வற்றிலும் பின்பற்றப்பட்டு வருகிறது!*

*இடையில், 2018 ஜனவரி மாதம் நடைபெற்ற தமிழ் சமஸ்கிருத அகராதி வெளியீட்டு விழாவில் பங்கேற்ற சின்ன சங்கராச்சாரியார், தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்ட போது, இருக்கையை விட்டு எழாமல், மேடையில் அமர்ந்து இருந்தார்! அவருடைய ஆணவத்தையும், தமிழ் அவமதிப்பையும் அன்று நாடே கண்டனம் செய்தது!*

*பிறகு, 2021 இல் ஏற்பட்ட ‘திராவிட மாடல்’ அரசு, அவ்வாண்டு டிசம்பர் மாதம், மேடைகளில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் பொழுது, மாற்றுத்திறனாளிகளைத் தவிர அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது! இப்போது மீண்டும் தமிழ்த் தாய் வாழ்த்துக்கும், தமிழுக்கும், தமிழர்களுக்கும் ஓர் அவமானம் ஏற்பட்டு வருகின்றது!*

*இன்றைய தமிழ்நாடு அரசு பதவி ஏற்ற நாளில், ஆளுநர் பங்கேற்றார் என்பதைக் காரணம் காட்டி, முதலில் வந்தே மாதரம், அடுத்து ஜன கண மன, மூன்றாவதாகத் தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டது! இப்படி, தமிழ் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டதைக் கண்டித்து, நாடு முழுவதும் கண்டனங்கள் எழுந்தன! இதோ, இப்போது தமிழ் மீண்டும் அவமதிக்கப்படுகிறது!*

*தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதிய பேராசிரியர் சுந்தரனார் பெயரில் இயங்கும் நெல்லைப் பல்கலைக்கழகத்திலேயே, அந்த அவமானம் நிகழ்கிறது! பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில், மூன்றாவதாகத்தான் தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெறும் என்றும், ஆளுநர் மாளிகையில் இருந்து தங்களுக்கு ஆணை வந்திருப்பதாகவும், அப்பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் கூறியிருக்கிறார்!*

*இதனைத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது! இவ்வாறு 28ஆம் தேதி தமிழ் அவமதிக்கப்படுமானால், அதை எதிர்த்து ஆர்ப்பாட்டமும், போராட்டங்களும் தமிழ்நாட்டில் நடத்தப்படும் என்றும் எச்சரிக்கிறது!*

*இவ்வாறு சுப. வீரபாண்டியன், தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*

## உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை மீற முயற்சிக்கிற

# கர்நாடகா வலையில் தமிழ்நாடு சிக்கிவிடக்கூடாது!

## தஞ்சாவூர் விவசாயிகள் வலியுறுத்தல்!

தஞ்சாவூர், ஜூலை 29–

உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை மீற முயற்சிக்கும் கர்நாடகாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் பலியாகக் கூடாது என தஞ்சை விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

காவிரி நீரை திறந்து விடாமல் டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதியாக மாற்ற முயற்சிகள் நடைபெறுவதாக விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஜூன் மாதம் 12ம் தேதி தஞ்சை டெல்டா மாவட்டங்களின் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையை திறந்திருந்தால், தற்போது டெல்டா மாவட்டங்களில் நாற்றுகள் வளர்ந்து பசுமை போர்த்தியதுபோல் வயல்வெளிகள் பச்சைப்பசேல் என்று காட்சி தந்திருக்கும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

ஆனால், தண்ணீர் திறக்கப்படாததால், மாடுகளுக்கு கூட தீவனப்பற்றாக்குறை ஏற்பட்டு டெல்டா வறண்டு கிடப்பதாக விவசாயிகள் கூறினார்.

இதனிடையே, காவிரி நீர் விவகாரம் தொடர்பாக கர்நாடக முதலமைச்சரை, தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் சந்திக்க இருப்பதாக செய்திகள் வெளியான நிலையில், உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை மீற முயற்சிக்கும் கர்நாடகாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் பலியாகி விடக் கூடாது என தஞ்சை விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கர்நாடக விரிக்கும் வலையில் தமிழ்நாடு முதலமைச்சர் சிக்கிக்கொண்டால், தமிழக விவசாயம் அழிந்துவிடும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## கோவில் சொத்தை ஆட்டையைப் போட்டதைத் தொடர்ந்து

# அரசு வழக்கறிஞர் நியமனத்தில் படுஜோராக வசூல்!

## த.வெ.க. அரசு மீது தி.மு.க. ஐ.டி. விங் குற்றச்சாட்டு!

**சென்னை, ஜூலை 29 –**

கோவில் சொத்தை ஆட்டையைப் போட்டு அப்பட்டமாக மாட்டிக்கொண்டாலும் தமிழ்நாடு முழுவதும் அரசு வழக்கறிஞர் நியமனத்தில் படுஜோராக ‘PARTY FUND’ வாங்கிக் கொண்டிருக்கிறது த.வெ.க அரசு.

ஏற்கெனவே, அமைச்சர் ஆனந்த் பரிந்துரையில் ரூ.5 முதல் 30 லட்சம் வரை லஞ்சம் பெற்றே அரசு வழக்கறிஞர்களை நியமனம் செய்வதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த தவெக விழுப்புரம் மாவட்ட வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் ஞானசௌந்தரி தவெகவில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார்!

பின்னர் அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு லஞ்சம் பெற்றதாக தேனி தெற்கு மாவட்டச் தவெக செயலாளர் லெஃப்ட் பாண்டி மீது எஸ்.பி அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது.

தற்போது, கன்னியாகுமரியில் அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு கன்னியாகுமரி மத்திய மாவட்ட தவெக செயற்குழு உறுப்பினர் அனீஷ்,





“மத்தவங்களுக்கு 15 லட்சம் தவெக என்பதால் 12 லட்சம்” என பேரம் பேசும் ஆடியோ வெளியாகி இருக்கிறது.

உங்க அண்ணன், உங்க விஜய் என வாய்கிழிய வெட்கமின்றி பேசும் விஜய் என்ன செய்து கொண்டிருக்கிறார்? எங்கு எங்கு என்னென்ன கமிசன் வாங்கலாம் என ஆலோசனைக் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறாரா?

ஊழலை ஒழிக்க வந்த உத்தமன் போல பேசிய விஜய்தான் நம்பர் 1 ஊழல்வாதியென காலம் காட்டிக்கொண்டிருக்கிறது! சட்டத்துறையை கையில் வைத்திருக்கும் RSS நிர்மல் குமார் பற்றி நாம் சொல்லவே வேண்டாம்!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.